# மாற்றுத்திறனாளி மாணவர்கள் மெட்ரோ ரயிலில் பயணம்



சென்னை மெட்ரோ ரயிலில் புதன்கிழமை பயணம் மேற்கொண்ட சிறுமலர் பள்ளியின் மாற்றுத்திறன் மாணவ, மாணவியர்.

சென்னை, ஜூலை 4: சென்னை அண்ணா சாலையில் உள்ள சிறுமலர் பள்ளியைச் சேர்ந்த செவித்திறன் மற்றும் பார்வை குறைபாடுடைய மாற்றுத்திறனாளி மாணவர்கள் சென்னை மெட்ரோ ரயிலில் புதன்கிழமை பயணம் மேற்கொண்டனர்.

இதுதொடர்பாக சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

பள்ளி மாணவர்களுக்கு மெட்ரோ ரயில் பயணம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் சிறப்பு ஏற்பாடு செய்துள்ளது.

இப்பயணத்தின் மூலம், மெட்ரோ ரயில்கள் இயக்கம், ரயில் நிலையங்களில் உள்ள வசதிகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அம்சங்கள் குறித்து பள்ளி மாணவர்கள் தெரிந்து கொள்ள ஏற்பாடு செய்யப்படுகிறது.

அந்த வகையில், சென்னை அண்ணா சாலையில் உள்ள சிறுமலர் செவித்திறன் மற்றும் பார்வைக் குறைபாடுடையோருக்கான மேல்நிலைப் பள்ளி மாணவர்கள், சென்னை மெட்ரோ ரயிலில் பயணம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது.

150 மாற்றுத்திறனாளி மாணவர்கள், சென்னை ஏஜிஎஸ் தேனாம்பேட்டையிலிருந்து விமான நிலையம் வரை மெட்ரோ ரயிலில் புதன்கிழமை பயணம் செய்தனர். அவர்களுடன் சிறுமலர் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பாதுகாவலர்களும் பயணம் மேற்கொண்டனர். இம்மாணவர்களுக்கு மெட்ரோ ரயில் சேவைகள் குறித்து விரிவாக விளக்கப்பட்டது.

சென்னை மெட்ரோ ரயிலில் 2018 -19 -ஆம் கல்வியாண்டுக்கான கல்விப் பயணம், சென்ற ஜூன் மாதம் 21 -ஆம் தேதி தொடங்கியது. அதில் இதுவரை மாநகராட்சி மற்றும் அரசுப் பள்ளி மாணவர்கள் 1,993 பேர் பயணம் மேற்கொண்டுள்ளனர் என்று மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.